## 9.2 தேசிய கரிம எரிவாயுத் திட்டம் – 1998–99 – இலக்கு மற்றும் துணை வழிகாட்டு நெறிமுறைகள்

ந.க.20009/97/என்.இ.டி.எம்.– 1 நாள். 28.03.98

**சுற்றறிக்கை**

பொருள் : தேசிய கரிம எரிவாயுத் திட்டம் – 1998–99–ம் ஆண்டில் செயற்படுத்துதல் – இலக்கு மற்றும் துணை வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டது – தொடர்பாக

பார்வை : 1. மத்திய அரசு கடிதம் எண்.5–5/97 க.வா. நாள்.21.05.1997.
2. இவ்வலுவலக கடிதம் எண்.33646/97/என்.இ.டி.எம்–1 நாள்.29.05.1997

தேசிய கரிம எரிவாயுத் திட்டத்தின்கீழ் (N.P.B.D.) குடும்ப அளவிலான கரிமவாயு கலன்கள் நிறுவப்படுகின்றன. இத்திட்டம் ஒரு மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டம் இருபது அம்ச திட்டத்தில் திட்ட எண் 19 (ஈ)–ல் இடம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

- ஊரகபகுதி குடியிருப்புகளில் சமையலுக்கான எரிபொருள் அளித்தல் மற்றும் தரமான உரம் அளித்தல்
- கிராம மகளிர் இடர்பாடுகளை குறைத்தல், காட்டுவளம் அழிக்கப்படுவதை தவிர்த்தல் மற்றும் சமுதாய நலன்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்
- சுகாதார கழிப்பறைகளை கரிமவாயு கலன்களுடன் இணைத்து கிராமங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

1998–99–ம் ஆண்டிற்கான இலக்கு

இத்திட்டத்தின்கீழ் 1997–98ம் ஆண்டுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 2000. அதே எண்ணிக்கையிலான இலக்கினையே பின்பற்ற வேண்டும்.

**பொருத்தமான அளவிலான கரிம வாயு கலன் தேர்ந்து எடுத்தல்**

கிடைக்கக்கூடிய அளவிலான சாணத்தின் அடிப்படையில் பொருத்தமான அளவிலான கலனை கீழ்க்குறிப்பிட்டுள்ள விபரப்படி தேர்ந்தெடுக்கப்படலாம்.

| கலனின் கொள்ளளவு (நாள் ஒன்றுக்கு உற்பத்தியாகும் எரிவாயு கனமீட்டரில்) | நாள் ஒன்றுக்கு தேவைப்படும் ஈரமான சாணம் (கிலோவில்) (அதே அளவிலான தண்ணீருடன் கலக்கப்பட வேண்டும்) | சாணத்திற்கு தேவையான தோராயமான கால்நடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 25 | 2 – 3 |
| 2 | 50 | 4 – 6 |
| 3 | 75 | 7 – 9 |
| 4 | 100 | 10 – 12 |

**கரிம வாயு கலன் நிறுவுவதற்கான முன்தேவைகள்.**

1. தினந்தோறும் கலனுக்குள் இடுவதற்கு தேவைப்படும் போதுமான அளவு சாணம் கிடைக்கப்பெறுதல், மேற்படி தேவையான அளவு சாணம் கிடைக்கப்பெறுவதை சொந்தமாக உள்ள கால்நடைகள் மற்றும் அவற்றின் கன்றுகளின் எண்ணிக்கையைக் கொண்டு நீண்டகால தேவை அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.
2. கலனுக்குள் இடப்பட வேண்டிய சாணத்தின் அளவிற்கு சரிசமமான அளவில் தண்ணீர் ஊற்றி கலனுக்குள் தேவையான சாணக்கலவையை உருவாக்க போதுமான தண்ணீர் ஆண்டு முழுவதும் கலனுக் அல்லது வீட்டுக்கு அருகில் கிடைக்கப்பெறுதல்.

3. கலன் கட்டுவதற்கு மற்றும் கலனுக்கு அருகில் இரண்டு உரக்குழிகள் அமைக்க தேவையான நிலம் சொந்தமானதாக இருக்க வேண்டும்.

4. கலன் நிறுவிட தேவைப்படும் தொகையில் அரசு மான்யத்தை விடுத்து எஞ்சிய தொகையை பொறுத்த மட்டில் சொந்த நிதியைக்கொண்டு நிறுவ விருப்பம் உள்ளவராகவோ அல்லது வங்கிக் கடன் பெற தகுதியுள்ளவராகவோ இருத்தல்.

**கரிம வாயு கலனுக்கு மான்யம்.**

மறு உத்தரவு வழங்கப்படும் வரையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படியிலான மான்ய விகிதம் பின்பற்றப்படலாம்.

| கலனின் அளவு / கொள்ளளவு | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடியினர் / சிறுவிவசாயி / குறுவிவசாயி மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி மற்றும் அறிவிக்கப்பட்ட மலைப்பகுதிக்கு உரிய மான்யம் | இதரர்களுக்கு உரிய மான்யம் |
|---|---|---|
| 1 க.செ.மீ முதல்<br>10 க.செ.மீ.வரை | ரூ.2,500/– | ரூ.2,000/– |

சுகாதார கழிப்பறைகளை கரிம வாயு கலன்களுடன் இணைப்பதற்கு கூடுதல் மான்யமாக கலன் ஒன்றுக்கு ரூ.500/– அளிக்கலாம். இத்தொகையானது சுகாதார கழிப்பறையை உயர்த்தி கட்டுவதற்கும் கரிம வாயு கலனுடன் இணைப்பதற்கும் ஆகும் கட்டுமான செலவுக்காக அளிக்கப்படுகிறது.

டீசல் இன்ஜினை இருவித எரிபொருள் மூலம் இயக்கச்செய்யும் இன்ஜினாக (அதாவது கரிம வாயு எரிபொருள் மூலமாகவும் இயங்கச் செய்ய ஏதுவாக) மாற்றுவதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் கரிம வாயுவை சேகரித்து வைக்கவும், கலன் இருக்கும் இடத்தில் இருந்து ஆயில் இன்ஜின் இருக்கும் இடத்திற்கு கரிம வாயுவை எடுத்துச்செல்லவும் தேவையான ரப்பர் பலூன்கள் மற்றம் கண்டெய்னர்கள் வாங்குவதற்கும் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. உபகரணங்கள் விலை சுமார் ரூ.600/- ஆகவும் மற்றும் 3 அல்லது 4 கனமீட்டர் கொள்ளளவு உடைய 2 அல்லது 3 பலூன்களின் விலை சுமார் ரூ.5000/–ம் ஆகவும் இருக்கும். மேற்படி இனங்களின் மொத்த விலைத்தொகையில் ஐம்பது சதவீதம் வரை அதிகபட்சமாக ரூ.2500/–க்கு மிகாமல் பயனாளிகளுக்கு மான்யமாக வழங்கப்படும்.

**சுழற்சாவி பணி கட்டணம்.**

சுழற்சாவி முறை அடிப்படையில் சுழற்சாவி முகவர் / சுயவேலை தொழிலாளர்கள் அரசு சாரா நிறுவனம் ஆகியோரால் மூன்று ஆண்டுகட்கு பழுதில்லாது இயங்குவதற்கான உத்திரவாதத்துடன் கட்டப்படும் கலன்களுக்கு அவர்களால் கட்டப்படும் கலன் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் சுழற்சாவி பணிக்கட்டணமாக வழங்கப்படலாம்.

மூன்று ஆண்டு கால உத்தரவாதத்திற்கு ஆதாரமாக ஒரு உத்திரவாத அட்டை சுழற்சாவி முகவர்களால் பயனாளிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். கலன் நிறுவிய சுழற்சாவி முகவர் / சுயவேலை தொழிலாளர் ஆகியோர் உத்திரவாத காலத்தில் (Guarantee Period) ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய ஏற்படும் செலவினை அவர்தம் சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும். கலன் நிறுவும் தருணத்தில் மூன்று ஆண்டுகட்கு பராமரிக்கத்தக்க ஒப்பந்தம் ஒன்று சுழற்சாவி முகவர்களுடன் செய்துகொள்ளப்படல் வேண்டும். மற்றும் சுழற்சாவி முகவர் கட்டணம் மேற்படி ஒப்பந்தத்திற்கு ஏற்றபடி மூன்று ஆண்டு தவணைகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களால் வழங்கப்பட வேண்டும். சுழற் சாவி முகவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது ஒவ்வொரு கலனையும் பார்வையிட வேண்டும். உத்திரவாத காலத்திற்கு பிறகும் சுழற்சாவி முகவர் மற்றும் பயனாளிகளுக்கு இடையே உத்திரவாத காலத்தில் இருந்ததைப் போன்றே ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

ஒரு சுயவேலைத் தொழிலாளருக்கு சமதள நிலப்பகுதியில் நூறு கலன்கள் இலக்கு நிர்ணயிப்பது சரியானதாக இருக்கும். தொலைதூரப்பகுதி, மலைப்பகுதி ஆகிய இடங்களில் இது சற்றே குறைந்த எண்ணிக்கையில் இருக்கலாம்.

## 9. Bio Gas

உள்ளூர் தேவை மற்றும் போதுமான மதிப்பூதியம் பெற ஏதுவாக சுய தொழிலாளர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளச்செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுயவேலைத் தொழிலாளர்கள் / சுழற்சாவி தொழிலாளர்கள் எண்ணிக்கை நிர்ணயிக்கலாம்.

கரிமவாயு கலன் – மற்றும் உபகரணங்கள் தேர்ந்து எடுத்தல்.

தொழில் நுட்ப ரீதியாக அதாவது கலன் நிறுவத்தக்க இடம் தேவையான சாணம் மற்றும் தண்ணீர் ஆகியவை கிடைக்கபெறுவதற்கான வாய்ப்பு, பயனாளிகளின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் பொருத்தமான வகையிலான கரிம வாயு கலன் தேர்வு செய்யப்படல் வேண்டும். மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கரிமவாயு கலன்களின் வகைகள் கீழ்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

| | வகை | கொள்ளளவு (நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் எரிவாயுவின் அளவு கனசென்டி மீட்டரில்) |
|---|---|---|
| அ | செங்கல் (அல்லது) கற்களால் கட்டப்பட்ட செரிமானத்தைக் கொண்ட (digester) மிதக்கும் தகர வகையிலான கே.வி.ஐ.சி. கரிம வாயு கலன்கள் | 1–10 |
| ஆ | பெர்ரோ சிமெண்டால் (Ferro Cement) கட்டப்பட்ட செரிமானத்தைக் கொண்ட (digester) கே.வி.ஐ.சி. வகையிலான கலன்கள். | 1–10 |
| இ | நூலிழை கண்ணாடி மற்றும் உறுதிபடுத்தப்பட்ட பிளாஸ்டிக்காலான கே.வி.ஐ.சி. வகையிலான கலன்கள் (Fibre glass with reinforced Plastic) | 1–10 |
| ஈ | ஜனதா வகை 1 மற்றும் 2 | 1–10 |
| உ | தீனபந்து வகை | 1–6 |
| ஊ | பிரகதி வகை | 1–6 |
| எ | பூனே ஸ்வஸ்திக் ரப்பர் பொருட்கள் நிறுவனத்தால் தயாரித்து வழங்கப்படும், ரப்பர் நைலான் நூல் இழையிலான (Rubberised Nylon Fabric) பை (Bag) வகை செரிமானம் (digester) கொண்ட வகை (Flxi Model) கலன் | 1–6 |

குறிப்பு :-

1. பயிற்சி பெற்ற கொத்தனார்கள் மூலமே கரிமவாயுக் கலன்கள் கட்டப்பட வேண்டும் என பயனாளிகள் / களபணியாளர்கள் கட்டாயம் அறிவுறுத்தப்பட வேண்டும். குறிப்பிடும்படியான தரம் வாய்ந்த் சிமெண்ட், செங்கல் போன்ற கட்டுமான பொருள்களும், குறிப்பிட்டு வரையறுக்கப்பட்ட மாதிரியிலான வாயு தாங்கிகளையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். கலன்கள் நிறுவும்போது சரியான நடைமுறைகள் பின்பற்றப்படுவதற்கும் மற்றும் கலன்களை மேற்பார்வையிடுவதற்கும் அதிக முக்கியத்துவம் தரவேண்டும்.
2. முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட விலையில் இந்தியத்தர நிர்ணயச் சான்று பெறப்பட்ட தீச்சுவாலை சாதனங்கள (Burner) மற்றும் நல்ல தரமுள்ள விளக்குகள், ஆகியவைகளே பயனாளிகளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## 9. Bio Gas

**விளம்பர முகாம்கள்.**

கரிமவாயு தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்ச்சியை மேம்படுத்தவும் கரிம வாயுக் கலன் பழுது நீக்கம் / இடர்பாடுகளை அகற்றுதல் தொடர்பான தகவல்களை கலன் உரிமையாளர்கள் இடையே பரப்பவும் விரிவான விளம்பரம் அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பர முகாம்களுக்கு உரிய விரிவான வகைகள் வருமாறு.

1. விளம்பரங்கள் / பத்திரிக்கைச் செய்தி வெளியிடுதல்.
2. விளம்பரதாள்கள், புத்தகங்கள், சுவர் ஓவியங்கள், விளம்பரதட்டிகள், விளம்பர நாட்காட்டிகள் ஆகியவை கண்காட்சி / சந்தையில் விநியோகம் செய்தல்
3. கிராமிய நடனம், நாடகம், பாடல்கள், விளக்கப்படம் வானொலி விளம்பரம்.

இரண்டாயிரம் எண்ணிக்கையிலான கலன்கள் நிறுவுவதற்கான இலக்கு இருப்பின் மொத்த ஒதுக்கீட்டில் விளம்பரத்திற்காக ரூ.2.50 இலட்சம் வரை செலவிடப்படலாம். இதன் மாவட்ட வாரியான பகிர்வு விபரம் இணைப்பு 2–ல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மொத்த ஒதுக்கீட்டிலிருந்து, விளம்பரத்திற்கான நிதியினை பகிர்வு செய்து கொள்ளப்பட வேண்டும்.

**உபயோகிப்பாளருக்கான பயிற்சி திட்டம்.**

கரிம வாயு கலன் உபயோகிப்பாளருக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதில் தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவரையும் பங்குபெறச் செய்ய வேண்டும். பயிற்சி வகுப்புக்கான மாதிரி பாடத் திட்டம் இணைப்பு–3ல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து நடைமுறைகளும் தவறாமல் பின்பற்றப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு 50 உபயோகிப்பாளர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பு நடத்தப்படலாம். வகுப்பு ஒன்றுக்கு ரூ.750/– வீதம் செலவினம் மேற்கொள்ளப்படலாம். செலவினத்திற்கு உரிய விபரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1) | கரிம வாயு கலனில் சமைத்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்க தேவையான பொருள்கள் வாங்க, பங்கு பெறுவோர்க்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி அளிக்க பயிற்சியின்போது பயிற்சியாளர்களின் பார்வைக்கு / காட்சிக்கு வைக்க வேண்டிய பொருள்கள் ஆகிவற்றிற்கு | ரூ.250/– |
| 2) | பங்குகொள்பவர்களுக்கு நபர் ஒன்றுக்கு சராசரியாக ரூ.6/– வீதம் பயணப்படி | ரூ.300/– |
| 3) | பயிற்சி நடத்துபவருக்கான மதிப்பூதியம் (தினப்படி, பயணப்படி உட்பட) | ரூ.200/– |

**கரிமவாயு பயிற்சி மையம் :- (Bio gas Technical Centre)**

கோயம்புத்தூர் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழக, விவசாய பொறியியல் கல்லூரியை கரிம வாயுத்திட்ட வளர்ச்சி மற்றும் விளம்பர உதவிக்காகவும், கரிம வாயுத் திட்டத்தின்கீழ் அலுவலர்கள் சுழற் சாவி முகவர்கள், சுய தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு தொழிற்நுட்ப பயிற்சி அளிப்பதற்கும் எற்றதொரு கரிமவாயு பயிற்சி மையமாக மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இம்மையம், இத்திட்டத்தின்கீழ் உரிய தொழில் நுட்பம் மற்றும் உள்ளூர் தேவைகளை வழங்கும். இத்திட்டம் தொடர்பாக தேவைப்படும் உதவிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் உயிரினக் கழிவு எரிசக்தித் துறை பிரிவு பேராசிரியர் டாக்டர் எஸ்.காமராஜ் என்பவருடன் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தொடர்பு கொள்ளலாம். கரிம வாயு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற சுழற்சாவி முகவர்கள் / சுய தொழிலாளர்கள் பட்டியல் ஏதும் இல்லையெனில் மேற்படி கரிமவாயு பயிற்சி மையத்திலிருந்து பயிற்சி பெற்ற சுழற்சாவி முகவர் / சுய தொழிலாளர் பட்டியலை கோரி பெற்றுக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேவைக்கு ஏற்ப புதிய நபர்களை பயிற்சிக்கு அனுப்பி வைக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கரிமவாயு விரிவாக்க மையம் (Bio gas Extension Centre)**

கோயம்புத்தூரில் உள்ள என்.இ.ஆர்.டி. (N.E.R.D.) மற்றும் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தா கேந்திரா ஆகியவை கரிமவாயு விரிவாக்க மையங்களாக மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டுள்ளன. உபயோகிப்பாளர் பயிற்சி முகாம் நடத்துவதற்கும் அலுவலர்கள் சுயதொழிலாளர்கள், சுழற்சாவி முகவர்கள்

ஆகியவர்களுக்கு தேவையான பயிற்சிகளை நடத்திடவும் இந்த விரிவாக்க மையங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கடன் உதவி (Institutional Finance):-**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் வங்கித் திட்டம் தயாரிப்பது போலவே வங்கிக் கடன் உதவியுடன் கரிம வாயுக் கலன் நிறுவுவதன் பொருட்டும் வங்கித் திட்டம் ஒன்று தயாரிப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி வங்கித் திட்டத்தில் வங்கிக் கிளை வாரியாக வங்கிக் கடனுக்குரிய இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும் மற்றும் வங்கி கடன் விண்ணப்பங்கள் 30.6.1998–க்குள் அனுப்பப்பட வேண்டும். மற்றும் வங்கிக் கடன் முறையாக வழங்கப்படுவதனை உறுதி செய்யும்பொருட்டு, உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**செயலாக்க ஆய்வு / தகவல் அளித்தல் :-**

முடிக்கப்படாமலும், உபயோகத்திற்கு வராமலும் உள்ள கரிமவாயு கலன்கள் மாதாந்திர அறிக்கை மற்றும் மான்யம் கோருவதற்கான அறிக்கைகளில் சேர்க்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு காலாண்டிலும் நிறுவப்பட அனைத்து கலன்களையும் நேரடியாக தலப்பார்வையிட வேண்டியது அவசியமாகும். தொடர்புடைய கூடுத்தல் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மூலமே 100% தலப்பார்வையிடப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும். அதில் குறைந்தபட்சம் 20% ஒவ்வொரு உதவித் திட்ட அலுவலர்களாலும், 5%திட்ட அலுவலர்களாலும் சரிபார்க்கப்பட வேண்டும். தவறான மான்யக் கோரிக்கை ஏதும் காணப்பட்டால் அதற்கு தல ஆய்வு மேற்கொள்ள தவறிய அலுவலரே பொறுப்பு ஆவார்.

விரிவான ஆண்டுச் செலவின அறிகையை இணைப்பு 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அளிக்கப்பட வேண்டும். கரிம வாயுத் திட்டத்தில் 1997–98–ம் ஆண்டிற்கு உரிய செலவினத்திற்கு இந்தப்படிவம் முழுமையான அளவில் பூர்த்தி செய்யப்பட்டு 30.06.98க்குள் ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு அனுப்ப வேண்டும்.

**பதிவேடுகள் பராமரித்தல் :-**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அளவில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பதிவேடுகள் கட்டாயம் பராமரிக்கப்பட வேண்டும்.

1. மான்ய பதிவேடு
2. சுழற் சாவி முகவர் கட்டணப் பதிவேடு
3. பழுதடைந்த கலன்கள் விபரப்பதிவேடு
4. ரொக்க புத்தகம் / வங்கி கணக்குப் புத்தகம்
5. சுழற்சாவி முகவர்கள் / அரசு சாரா நிறுவனங்கள் பட்டியல்கள் பதிவேடு

வட்டார அளவில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகள் கட்டாயம் பராமரிக்கப்படல் வேண்டும்.

1. வட்டாரத்தில் நிறுவப்பட்டுள்ள கரிம வாயுக்கலன்களின் முதன்மை பதிவேடு
2. விண்ணப்பங்கள் பதிவேடு
3. பழுதடைந்த கலன்கள் விபரப்பதிவேடு
4. சுழற்சாவி முகவர்கள் / அரசு சாரா நிறுவனங்கள் பட்டியல் பதிவேடு

இந்த சுற்றறிக்கையின் நகல் ஒன்றினை அனைத்து கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊராட்சிகள்) மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களுக்கும் அனுப்பிட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஊரக வளர்ச்சி இயக்குநர்

இணைப்பு – 1
தேசிய கரிம வாயு திட்டத்தில் 1998 – 99ம்
ஆண்டிற்கான தோராய செயல் இலக்கு

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | நிறுவப்பட வேண்டிய கரிமவாயு கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 35 |
| 2 | திருவள்ளூர் | 38 |
| 3 | கடலூர் | 65 |
| 4 | விழுப்புரம் | 95 |
| 5 | வேலூர் | 100 |
| 6 | திருவண்ணாமலை | 100 |
| 7 | சேலம் | 120 |
| 8 | நாமக்கல் | 80 |
| 9 | தர்மபுரி | 100 |
| 10 | ஈரோடு | 200 |
| 11 | கோயம்புத்தூர் | 175 |
| 12 | நீலகிரி | 3 |
| 13 | தஞ்சாவூர் | 40 |
| 14 | நாகப்பட்டிணம் | 50 |
| 15 | திருவாரூர் | 50 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 80 |
| 17 | கரூர் | 60 |
| 18 | பெரம்பலூர் | 20 |
| 19 | புதுக்கோட்டை | 60 |
| 20 | மதுரை | 75 |
| 21 | தேனீ | 40 |
| 22 | திண்டுக்கல் | 57 |
| 23 | இராமநாதபுரம் | 57 |
| 24 | விருதுநகர் | 50 |
| 25 | சிவகங்கை | 50 |
| 26 | திருநெல்வேலி | 100 |
| 27 | தூத்துக்குடி | 50 |
| 28 | கன்னியாகுமரி | 50 |
| | **மொத்தம்** | **2000** |

இணைப்பு – 2
தேசிய கரிம வாயு திட்டத்தில் 1998 – 99ம்
ஆண்டிற்கான விளம்பர செலவின ஒதுக்கீடு

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 6500 |
| 2 | திருவள்ளூர் | 7000 |
| 3 | கடலூர் | 10000 |
| 4 | விழுப்புரம் | 9000 |
| 5 | வேலூர் | 6500 |
| 6 | திருவண்ணாமலை | 11000 |
| 7 | சேலம் | 9000 |
| 8 | நாமக்கல் | 10000 |
| 9 | தர்மபுரி | 7500 |
| 10 | ஈரோடு | 10000 |
| 11 | கோயம்புத்தூர் | 9500 |
| 12 | நீலகிரி | 2000 |
| 13 | தஞ்சாவூர் | 7000 |
| 14 | நாகப்பட்டிணம் | 5500 |
| 15 | திருவாரூர் | 5000 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 7000 |
| 17 | கரூர் | 4000 |
| 18 | பெரம்பலூர் | 5000 |
| 19 | புதுக்கோட்டை | 6500 |
| 20 | மதுரை | 6500 |
| 21 | தேனீ | 4000 |
| 22 | திண்டுக்கல் | 7000 |
| 23 | இராமநாதபுரம் | 5500 |
| 24 | விருதுநகர் | 6000 |
| 25 | சிவகங்கை | 5500 |
| 26 | திருநெல்வேலி | 9500 |
| 27 | தூத்துக்குடி | 6000 |
| 28 | கன்னியாகுமரி | 4500 |
| | மாநில அளவிலான விளம்பர செலவின ஒதுக்கீடு | 57500 |
| | **மொத்தம்** | **250000** |

இணைப்பு – 3

கரிமவாயு கலன் உபயோகிப்பாளர் பயிற்சி வகுப்புக்கான மாதிரி பாடத்திட்டம்

| வ.எண். | தலைப்புகள் |
|---|---|
| 1. | கரிமவாயு கலனிகளின் பயன்கள் |
| 2. | கரிமவாயுக்கலன்கள் பராமரிப்பும் பழுது நீக்கமும் |
| 3. | நிதி மற்றும் இதர உதவிகள் |
| 4. | கடன் விண்ணப்பங்கள் தயார் செய்தல் |
| 5. | கள ஆய்வு மற்றும் நடைமுறை செயல் விளக்கம் |

அ. கரிமவாயு கலன் பயன்படுத்துதல்

- மணல், ஜல்லி இவைகளில்லாத நல்லசாணம் சேகரம் செய்வது எப்படி ?
- சாணக்கலவை தயாரிப்பது எப்படி மற்றும் சாணக்கலவையை கரிமவாயுக் கலனுக்குள் எப்போது மற்றம் எவ்வாறு இடுவது ?
- அடுப்பு மற்றும் விளக்கு எரிப்பது எப்படி ?
- கரிமவாயு அடுப்பில் சப்பாத்தி சமைக்கும் முறை. (நேரடியாக சப்பாத்தி சுடுவதை செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கவேண்டும்.)
- உபயோகப்படுத்த வேண்டிய பாத்திரவகைகள்.
- குளிர்கால மாதங்களில் வாயு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முறைகள்
- செரிமானம் ஆன கலவையை எவ்வாறு சேமித்து வைப்பது மற்றும் எவ்வாறு நல்ல தரமான உரமாக பயிருக்கு உபயோகப்படுத்துவது ?
- கரிம வாயு கலன் இடத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பாதுகாப்பது எப்படி ?
- அடுப்பு திறந்திருக்கும்போது, சமையல் அறையில் வாயு கசியுமானால் மேற்கொள்ளப்பட வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன ?

ஆ. கரிமவாயு கலன் பராமரித்தல்

- காலமுறையில் அடுப்பு மற்றும் விளக்கினை சுத்தம் செய்வது எவ்வாறு ?
- வாயு தாங்கியை சுத்தம் செய்தல்
- வாயு குழாய் பாதையில் நீர் அகற்றுதல்
- நுழைவு வால்வு, வாயு குழாய் இணைப்புகள், டியூப் அழுத்தம், வாயு அடைப்பான் ஆகியவற்றை பரிசோதித்தல்.

ANNEXURE IV
PROFORMA FOR SUBMISSION OF DETAILED STATEMENT OF EXPENDITURE
FINANCIAL YEAR ..........................

1. Name and address of the State Nodal Department / Implementing Agency :

2. Physical Target :

3. Achievement :

4. Name of the District (Name of Block to be given in respect of hilly / Desert Districts where entire district is not covered) :

5. Details of subsidy / Addl. Subsidy claims :

| Category | Size and model of plant | No.of plants actually installed including date of completion | Total amount of subsidy distributed | Remarks if any |
|---|---|---|---|---|
| a. Desert area SF/MF/LL/ SC/ST/ hilly areas<br>b. Others / General<br>c. Addl. subsidy for sanitary toilet linked plants disbursed | | | | |

6. Details of claims of Turn Key job fee:

| Name and address of the Turn Key worker / Agency | Whether private of Govt. or company of Cooperative Society | No.of Biogas Plants setup on turn key basis | Amount of Claim |
|---|---|---|---|

7. Training Courses:

| Category of Training course | Target finalized | No.of courses actually organized | Expenditure incurred with UC | Amount of claims limited to physical achievement / actual expenditure incurred whichever is less |
|---|---|---|---|---|

a. Construction come maintenance training course

b. Turn-Key workers training course

c. Users training course

d. Staff training courses

---

8. Details of Service Charges :
   (i) Physical achievement
   (with reference to subsidy claim) :
   (ii) Amount of claim :
9. Details of Publicity :
   (i) Physical achievement
   (with reference to subsidy claim) :
   (ii) Amount of claim :

Certified that:

1. The plants for which subsidy, service charges, turn-key fee, etc. have been claimed have actually been commissioned during the period from 1.4 … to 31.3…. and requisite completion certificate in respect of these plants are available at the District Head Quarters.
2. These plants have been physically verified, sample test checks have been conducted and claims sent herewith relate only to the commissioned plants.
3. Certificate from the competent authority in respect of SC/ST beneficiaries and Small & Marginal Farmers etc. have been obtained.
4. The subsidy in respect of each of the above mentioned plants have been / will be disbursed to the beneficiaries concerned according to the rates prescribed for the respective category of beneficiary and size of the plant.
5. Beneficiary – wise details regarding the category of beneficiary, model, size and location of plant installed (with date of completion, amount of subsidy paid to beneficiary and date of payment) have been maintained and the above mentioned claims are in accordance with these details.
6. The Biogas Plants to which the claim pertain have actually been completed on Turnkey basis and turn-key job fee for these plants have not been claimed earlier from the Central and State Govt. KVIC/other Agencies.
7. The concerned beneficiaries are satisfied with the construction and fabrication and functioning of the plants and certificate to this effect have been obtained from them for record.
8. A written undertaking has been given to the beneficiaries concerned for fee of cost service for inspection, guidance and to repair defects, if occurred during the period of three year from the date of commissioning of the plant.
9. It is certified that detailed accounts vouchers have been maintained for each training course at an appropriate level for post facto audit purpose.

Place : Signature

Date : Designation:

Seal